tp://www.maalaimalar.com Regd. No. TRY/061/2015-2017 RNI.No.42628/85

மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

MAALAI MALAR

ருச்சி 17-12-2017 (ஞாயிற்றுக்கிழமை) 8 பக்கம் 400 காசு ★★★ | மலர் 41 இதழ் 3

### ஆயிர வைசியர் சமூகத்தை

# மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும்

## திருச்சியில் நடந்த விழாவில் தீர்மானம்

திருச்சி, டிச. 17–

திருச்சி மாவட்ட ஆயிர வைசியர் சங்கத்தின் 4–ம் ஆண்டு தொடக்க விழா திருச்சியில் நடந்தது. விழாவுக்கு தமிழ்நாடு ஆயிர வைசியர் சங்கத்தின் மாநில தலைவரும், சேலம் விநாயகா மிஷன்ஸ் நிகர்நிலை பல்கலைக்கழகத்தின் வேந்தருமான ஏ.எஸ். கணேசன் தலைமை தாங்கி பேசினார்.

நிகழ்ச்சியில் மாநில செயல் தலைவர் சங்கரபாண்டியன், மாநில செயலாளர் ஜெயராமன், மாநில பொருளாளர் ஜெயக்குமார், திருச்சி மாவட்ட கவுரவ தலைவர் ரெங்கவிலாஸ் ரெங்கநாதன், திருச்சி மாவட்ட செயலாளர் பாண்டியன், தலைவர் மணிவேல், பொருளாளர் தாமோதரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

விழாவில் ஆயிர வைசியர் சமூகத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும். நெருஞ்சிப்பேட்டை ஆயிர வைசியர் மடத்திற்கு ஜனநாயக முறையில் நீதி மன்ற ஆணைப்படி விரைவில் அறங்காவலர் தேர்தலை நடத்தவேண்டும்.

சட்டமன்ற தேர்தலில் ஆயிர வைசியர் சமுதாயத்தை சார்ந்தவர்களுக்கு போட்டியிட வாய்ப்பு அளிக்க வேண்டும். அதே போன்று பாராளு ... உறுப்பினராக்க வாயப்பு அளிக்க வேண்டும். வாரியத் தலைவர் பொறுப்புகளில் வாய்ப்பு அளிக்க வேண்டும்.

உயர்நீதிமன்ற நீதிபதி மற்றும் தமிழ்நாடு தேர்வாணையம் மற்றும் ஐ.ஏ.எஸ் மற்றும் ஐ.பி.எஸ். ஆகிய பொறுப்புகளில், ஆயிர வைசியர் சமூகத்தில் தகுதி உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளித்து பணியாற்ற வாய்ப்பு அளிக்க வேண்டும். மதுரையில் கண்ணகிக்கு கோட்டம் அமைக்க வேண்டும்.

இசைமாமணி சீர்காழி கோவிந்தராஜனுக்கு அரசு சார்பில் மணிமண்டபமும், உருவச்சிலையும் அமைக்க ஆவணம் செய்யவேண்டும். ஆயிர வைசியர் சமூகத்தைச் சார்ந்த தமிழ்ச் சான்றோர்களுக்கு அரசு விருதுகள் வழங்கி கவுரவிக்க வேண்டும் என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. மேலும் விரைவில் சமுதாயத்தின் சார்பில் மாநில மாநாடு நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது.



விழாவில் தமிழ்நாடு ஆயிர வைசியர் சங்கத்தின் மாநில தலைவர் ஏ.எஸ்.கணேசன் பேசிய காட்சி.